**தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஏனைய திணைக்களங்களுக்கான பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 21,097,417 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்படாதிருந்தமையால் வருமானமல்லாத பெறுவனவுகள் அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அப்பெறுமதி பிழையாக கட்டுநிதி சீராக்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏனைய பெறுவனவாக இனங்காணப்பட்டுள்ள பெறுமதியில் 2002, 2003, 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளின் வருமான தலைப்புக்களுக்கு கிடைத்துள்ள வருமானமே உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020-7(ii) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். அதனால் | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

|  |  |  |
|---|---|---|
|  | அவ்வாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்காக சீராக்கங்கள் மேற்கொள்கின்ற கட்டுநிதி சீராக்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |  |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் கிரயப் பெறுமதியான ரூபா 758,203 தொகை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஒதுக்கக் கணக்கில் சீராக்கப்படாமையினால் அந்த பெறுமானத்தினால் சொத்துக்கள் மற்றும் ஒதுக்கங்கள் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த சொத்துக்களின் பெறுமதி 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை குறிப்பிடுகின்றோம். | சொத்துக்கள் அகற்றப்பட்ட பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் மற்றும் ஒதுக்க கணக்கில் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சிலிருந்து கிடைத்த நிதி ஏற்பாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,514,800 பெறுமதியான சொத்துக்கள் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் மாற்றப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண கணக்கிலும் ஒதுக்கக் கணக்கிலும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய அமைச்சு செலவின விடயங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் சிகாஸ் முறைமையில் பொருட் பதிவேடுகளுக்கு கொண்டுவரும் வசதிகள் காணப்படாதிருந்ததுடன், அவற்றை கணக்கீடு செய்வதற்காக அரச கணக்குகள் திணைக்களத்துடன் தற்போது கலந்துரையாடப்படுகின்றது. | அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட சொத்துக்கள் நாட்குறிப்பின் மூலம் மாற்றப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டும். |

## 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட பெறுமதி ரூபா 1,030,899 ஆக இருந்த போதிலும், அதற்கு மூலதன சொத்துக்கள் புனரமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் இயலுமை அபிவிருத்திற்கான ரூபா 2,381,388 செலவினமும் சேர்க்கப்பட்டு ரூபா 3,412,287 ஆக காண்பிக்கப்பட்டமையினால் அப்பெறுமதி ரூபா 2,381,388 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பௌதீக சொத்துக்கள் கைப்பற்றலின் பெறுமதி (ரூபா 1,030,899) சரியானதாக இருந்தமையும், மாதிரி படிவத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் மூலதன சொத்துக்கள் புணரமைத்தல், அபிவிருத்தி செய்தல், பௌதீக சொத்துக்களை கைப்பற்றுதல் மற்றும் இயலுமை அபிவிருத்தி போன்ற 03 செலவின தொகுதிகளுக்கு கூட்டுமொத்தமாக (ரூபா 3,412,287) சரியாக காண்பிக்கப்பட்டதை குறிப்பிடுகின்றோம். | காசுப் பாய்யச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் கைப்பற்றல் மாத்திரம் காண்பிக்கப்பட வேண்டும். |

## 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை

---

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) **பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மிகுதி நடவடிக்கைகளை | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படும். | வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு.** | | |
| நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாம் மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2020.12.31 இல் உள்ளவாறான மீதியில் 2021 இன் ஆரம்ப மீதியாக எடுத்து பதிவேடுகளுக்கு கொண்டுவந்து மின்சார உபகரண பதிவேடொன்று பேணிச்செல்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அரசாங்கத்தின் கட்டிடங்களின் சகல மின்சார துணைப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட்பதிவேட்டு புத்தகம் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் | திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதன் காரணமாக இது வரையில் உரிய மீளாய்வுகள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையை குறிப்பிடுவதுடன் அந்த பதவிக்காக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தவுடன் 2021 ஆம் ஆண்டு முதல் உரிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளக கட்டுப்பாட்டை பலப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) **அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் கடிதம்.** | | | |
| (i) 2012 மே 21 ஆம் திகதி EST/8/EXAMS/05/1 007-1 கடிதம். | பேச்சு மற்றும் எழுத்து மூல பரீட்சைகளுக்காக பகுதி நேர அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வள பங்களிப்பாளர்களுக்கும் படிகளை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் தமிழ் மொழி பேச்சு மற்றும் எழுத்து பரீட்சைகளை நடத்துதல் மற்றும் மொழிப் பயிற்சி பாடநெறிகளுக்காக | ஆலோசனையாளர்கள் மற்றும் பரீட்சகர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தெளிவூட்டும் மாநாடுகளை நடத்தும் கடமைச் செயற்பாடுகளும் திணைக்கள உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்படுகின்றது. | பேச்சு மற்றும் எழுத்து மூல பரீட்சைகளை நடத்துதல் மற்றும் பயிற்சி பாடநெறிகளின் கடமைகளுக்காக பங்காற்றுகின்ற முழு நேர உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவர்களை பதிவு செய்வதற்காக நிறுவனத்தில் முழுநேரம் சேவையாற்றகின்ற உத்தியோகத்தருக்கு அங்கீகாரம் இன்றி ரூபா 793,170 தொகையான படி செலுத்தப்பட்டிருந்தது. | | செலுத்துவதற்காக கொடுப்பனவு திட்ட முறைமையொன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி. | திணைக்கள பதவியணியினரின் சகல அங்கத்தவர்களுக்காகவும் வருடம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் மனித வள அபிவிருத்தி திட்டமிடலில் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டிற்காக மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது பிரிவு தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்காக மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | சகல உத்தியோகத்தர்களுக்கும் வருடம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பங்களுடன் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | 2020 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்விற்கு உரிய பௌதீக மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப முடியும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். கடந்த தினங்களில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 வைரஸ் நிலைமையின் | மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட வேண்டும். |

காரணமாக அலுவலக நடவடிக்கைகள் மற்றும் பதவியணியினர் வரையறுக்கப்பட்டமையினால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை மேலும் குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெறப்படாதிருந்தமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சரியான சந்தைப்படுத்தல் எதிர்வுகூறல் இன்றி 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அச்சிடப்பட்ட ரூபா 15,262,050 பெறுமதியான 60,576 புத்தகங்களின் பெறுமதியில் ரூபா 10,529,501 ஆன 47,667 புத்தகங்கள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எஞ்சியிருந்தது. மிகவும் மந்த கதியில் விற்பனை செய்யப்படுகின்ற இந்த புத்தகங்களை அச்சிடுவதற்காக ஏற்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவின பொறுப்பாக இருந்தது. | 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் மொழி தொடர்பாக அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களுக்கு காணப்பட்ட மொழி திறன் மற்றும் பரீட்சை தேவைகளின் அடிப்படையில் இந்த புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளது.<br>(i) அலகு கிரயத்தைக் குறைப்பதற்காக கணிசமான பிரதிகளின் அளவொன்று அச்சிடப்பட்டுள்ளது.<br>(ii) E-Books ஆக பயன்படுத்தப்படுகின்றமையினால் புத்தக விற்பனைக்கு நேரடியான தாக்கமொன்று ஏற்பட்டுள்ளது. திணைக்களத்தின் வெளியீடுகள் கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி போன்ற சந்தர்ப்பங்களின் | புத்தகங்களை அச்சிடும் போது சரியான சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போது விற்பனைக் கொட்டகைகள் பேணிச் செல்வதற்கு 2018 – 2010 ஆம் ஆண்டுகளின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் புத்தகங்களை அச்சிடுவதற்காக ஈடுபடுத்தப்பட்ட பணம் அனாவசியமற்ற நிதி செலவினமாக கவனத்தில் கொள்ள முடியாதிருந்ததை தயவுசெய்து குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | |
| (ஆ) | மொழி ஆய்வு கூடத்தில் பரீட்சைகள் மென்பொருளொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 975,500 தொகையான உடன்படிக்கை 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தின் போது கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஆண்டின் போது மென்பொருளை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமையினால் இலவசமாக பெறக்கூடியதாக இருந்த பராமரிப்பு சேவைகள் கைதவறியிருந்ததுடன், இது வரை பரீட்சை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துமவதற்கு பொருத்தமான நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது வரையில் முன் பரிசோதனைகள் மேற்கொண்டு பூர்த்தியடைந்துள்ளது. அதற்காக முறையானதாக நடாத்தப்பட்ட ஒரு பரீட்சையொன்று, மொழி ஆய்வு கூடத்தின் மாணவர்கள் பயன்படுத்திய பரீட்சைகள் மற்றும் நேர்முக பரீட்சைகளுக்காக முன்வந்திருந்த உயர் பயிற்சி பாடநெறியாளர்களின் பரீட்சைகள் இந்த மென்பொருளில் செயற்படுத்தப்பட்டிருந்தது. | மென்பொருளில் இருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததுடன், அதனை குறித்துரைத்த காலத்தில் பயன்பாட்டிற்கு எடுத்து இலவசமாக பெறக்கூடியதாக உள்ள பராமரிப்பு சேவைகளும் பெறப்பட வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அறிக்கை தற்போது தயாரிக்கப்படுவதுடன், விரைவாக அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சிங்களம், தமிழ் மொழிபெயர்ப்பு மென்பொருள் தயாரிப்பதற்காக ரூபா 4,860,000 தொகையும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது தமிழ், சிங்கள மொழி பெயர்ப்பு மென்பொருளை தயாரிப்பதற்காக ரூபா 5,950,000 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், இது வரை எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | மொழி பெயர்ப்பு பிரிவினால் சிங்களம் - தமிழ் மற்றும் தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்பு மென்பொருளை பயன்படுத்தி நாளாந்த மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை குறிப்பிடுகின்றோம். மேலும் எந்தவொரு மொழிபெயர்ப்பு மென்பொருளில் இருந்தும் 100 சதவீதம் சரியான மொழிபெயர்ப்பு ஒன்று கிடைக்கப் பெறாதிருந்தமையால் மென்பொருளின் மூலம் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களின் சரியான தன்மை மொழிபெயர்ப்பாளர்களினால் மீண்டும் பரீட்சித்தல் மேற்கொள்ளப்படுகின்மையையும் குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | சிங்கள மொழி தமிழ் மொழிக்கும், தமிழ் மொழி சிங்கள மொழிக்கும் மொழி பெயர்க்கும் மென்பொருளை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலையில் 2 பதவிகளும், மூன்றாம் நிலையில் 35 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 02 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போதும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணையாளர் பதவி திணைக்களமயப்படுத்தப்பட்ட நிலைமையில் காணப்படுகின்றமையை அகற்றி நிர்வாக சேவையின் பதவியொன்றாக ஏற்படுத்துவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. உதவி ஆணையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நிலையினதும் ஆரம்ப நிலையினதும் பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட முடியாது. |
| (ஆ) | இரண்டாம் நிலையின் பதவிகளின் மிகையான ஊழியர்களின் எண்ணிக்கை 20 ஆக காணப்பட்டது. | திணைக்களமயப்படுத்தப்பட்ட பதவிகளை புரிகின்ற உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட நிலைமையாகும். இந்த ஆளணியினரை ஏனைய நிறுவனங்களுக்கு நியமிக்குமாறு தற்போது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1999 ஆம் ஆண்டு முதல் மொழி பெயர்ப்பாளர் உதவியாளராக சேவையில் சேர்க்கப்பட்டுள்ள 42 உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். 2020 ஆம் ஆண்டிற்காக இந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 25,410,440 தொகையான சம்பளமும், படிகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டு திணைக்களத்திற்கு சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் அல்லது வருடாந்தம் பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்படாதிருந்ததுடன், அந்த உத்தியோகத்தரின் சேவை நேரடியாக திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்த போதிலும், மொழிபெயர்ப்பாளராக அவர்களின் சேவை பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்களின் சேவை தொடர்ந்தும் அந்த நிறுவனங்களுக்கு தேவையானதா என அந்த நிறுவன தலைவர்களிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களை வேறு நிறுவனங்களுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளும், திணைக்களத்திற்கு கொண்டுவருதற்கான தீர்மானம் எடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேள்கொள்ளப்பட்டுள்ளது. | சேவைக்கு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்பொறுப்புக்களை கையளித்து திணைக்களத்திற்கு சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |